# புலிகளுடனான பேச்சு விபரத்தைத் தருமாறு பிரேமா

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 17 இதழ் 354
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 30 — 01 — 1993

## ஆயரிடம் கோரிக்கை

(கொழும்பு) யாழ். நகரில் விடுதலைப்புலிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் விபரங்களை தெரியப்படுத்துமாறு அங்கிலிக்கன் திருச்சபை கொழும்பு ஆயர் கென்னத் பெர்ணண்டோவிடம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வேண்டுகோள் விடுத்துள்ளார் என அமைச்சர் வின்சன் பெரேரா தெரி (4-ம் பக்கம் பார்க்க)

தடைசெய்யப்பட்ட

## சில பொருட்களின் தடை நீக்கப்படும்?

(கொழும்பு) வடக்குக்கு கொண்டுசெல்ல தடைவிதிக்கப்பட்டுள்ள பொருட்கள் சிலவற்றின் மீதான தடையை தளர்த்துவது குறித்து தீவிரமாக ஆராயப்பட்டுவருவதாக திரு பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அரசு தரப்பும் கட்டுப்படைத் தன்மையக (4-ம் பக்கம் பார்க்க)

அவசரகால நிலையின் கீழ் ஆட்சிநடத்தவே

# ஜேவிபி மேலும் தலைஎடுப்பதாக ஜனாதிபதி சலசலப்பு காட்டுகிறார்

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியில் அவசரகால நிலையை நீடிக்கும் நோக்குடனேயே ஜே. வி. பி' இயக்கம் மீண்டும் தலைதூக்குவதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சலசலப்பு காட்டி வருகிறார் என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமை காரணமாக அங்கு தொடர்ந்தும் அவசரகால நிலை அமுலில் உள்ளது.

தென் பகுதியிலும் அவசரகாலநிலையை அமுலில் வைத்திருக்கும் நோக்குடனேயே ஜே. வி. பி. மீண்டும் தலை தூக்குவதாக ஜனாதிபதி சுட்டிக் காட்டி வருகிறார்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளுடன் முழு நாட்டிலும் அவசரகால நிலைமை அமுல்படுத்திக்கொண்டு ஆட்சி நடாத்துவதற்கு வசதியாகவே இந்தத் தந்திரம் கையாளப்பட்டுவருவதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

நாட்டில் ஜே. வி. பி. தலை (4-ம் பக்கம் பார்க்க)

## ரோகணவின் இடத்தை பிடிக்க பேராசிரியர் சில்வா முயற்சி

(கொழும்பு) ஜே. வி. பி இயக்க தலைவர் ரோகண விஜயவீராவின் இடத்தை கொழும்பு பல்கலைக்கழக கணிதவியல் பேராசிரியர் நளின் டீ சில்வா நிரப்பமுயல்கிறார் என இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1989ல் ஜனதா விமுக்தி பெரமுன மறைந்ததையடுத்தே அவ்விடத்தை நிரப்பும் முயற்சியில் இவர் ஈடுபட்டு வருவதாகவும் பல்கலைக்கழக மட்டத்தில் தனது செல்வாக்கை உயர்த்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுவருவதாக (4-ம் பக்கம் பார்க்க)

பூநகரி பாதை திறப்பு:

## ஏற்பாடு துரிதமாக நடைபெறுகின்றது

(கொழும்பு) பூநகரிப் பாதையை திறப்பது குறித்து அகதிகளுக்கான ஐ. நா உயர் ஸ்தானிகராலயம் (யு என் எச். சி. ஆர்.) அரசுடனும் புலிகளுடனும் மேலதிக பேச்சுக்களை நடாத்தவுள்ளதாக திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள் (4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தற்கொலைப்படை இந்தியாவுக்குள் ஊடுருவல்?

(கொழும்பு) விடுதலைப்புலிகள் இயக்கத்தின முக்கிய தளபதிகளில் ஒருவரான கிட்டுவின் மரணத்திற்குக்காரணமாக இருந்த இந்தியாவை பழிவாங்குவதற்காக விடுதலைப் புலிகள் புதுடில்லியிலும், சென்னையிலும் ஊடுருவி இருப்பதாக கொழும்பில் வெளியாகும் "ஐலண்ட்" பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

புதுடில்லியிலும், சென்னையிலும் புலிகளின் தற்கொலைப் படையினரின் பிரிவு ஒன்று ஊடுருவி இருப்பதாக தமக்கு இந்தியாவிலிருந்து செய்திகள் கிடைத்திருப்ப (4-ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் ஹிந்தி எழுத்துக்களை அழிப்பதாக வீரமணி சூளுரை

(சென்னை) எமது கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்காவிட்டால் தமிழ் நாட்டில் மீண்டும் ஹிந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட்டம் ஆரம்பிக்கப்படுமென்று திராவிடக்கழக தலைவர் திரு. வீரமணி இந்திய அரசுக்கு எச்சரிக்கை கொடுத்துள்ளார்

குறிப்பாக தொலைக்காட்சியில் தமிழுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை அதிகரிக்கும்படி மத்திய அரசுக்கு நாம் கொடுத்த கோரிக்கையை பெப்ரவரி மாதம் 10ம் திகதிக்குள் அரசு நிறைவேற்றாவிட்டால் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மத்திய அரசு நிறுவனங்களிலுமுள்ள ஹிந்தி எழுத்துக்களும் அழிக்கப்படுமென்று திரு. வீரமணி மேலும் கூறியுள்ளார். (இ-வி)

## கைதான சுவிஸ் பிரஜை நாடு கடத்தப்பட்டார்

(கொழும்பு) அநுராதபுரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரகசிய பொலிசாரால் கைது செய்யப்பட்ட சுவிஸ்- பிரஜை கடந்த வியாழக்கிழமை நாடு கடத்தப்பட்டார்

விடுதலைப் புலிகளுக்கான கடிதத்துடன் வவுனியா நோக்கி சென்றதாக இவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன் இவரது விபரங்களை பொலிசார் 'இன்ரபோல்'டமிருந்தும் பெற்றிருந்தனராம், (4-ம் பக்கம் பார்க்க)

கேணல் கிட்டு விவகாரம்:

## பாட்டாளி மக்கள் கட்சியின் ஊர்வலத்துக்கு தமிழக அரசு தடை

(சென்னை) விடுதலைப் புலிகளின் முத்த தளபதி கிட்டு உள்ளிட்ட 10 போராளிகள் வங்க கடலில் அண்மையில் பலியாகிய சம்பவத்தையடுத்து பாட்டாளி மக்கள் கட்சி ஏற்பாடு செய்துள்ள மௌன ஊர்வலத்திற்கு தமிழக அரசு தடைவிதித்துள்ளதாக அக்கட்சியின் தலைவர் எஸ். ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பாக தாம் நீதிமன்றத்தின் உதவியை நாடப்போவதாகவும் நீதிமன்றத்தின் உத்தரவு கிடைத்ததும் தாம் மீண்டும் மௌன அஞ்சலி ஊர்வலத்தை நடத்தியே தீருவேன் என அவர் சூளுரைத்துள்ளார். (இ-க)

## மூதூர் படகு விபத்து: உயிரிழந்தவரின் உறவினர்க்கு நிவாரணம் வழங்க முடிவு

(கொழும்பு) கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மூதூர் படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்கப்படும் என ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

திருமலையில் நேற்று இடம் பெற்ற ஜனாதிபதி இடம் பெயர் சேவை அங்குரார்ப் (4-ம் பக்கம் பார்க்க)

## கட்சியை தடைசெய்தால் கடும் விளைவுகள் ஏற்படும்

(சென்னை) பாட்டாளி மக்கள் கட்சியை தடைசெய்தால் கடும் விளைவுகள் ஏற்படும்என அக்கட்சியின் தலைவர் எஸ். ராமதாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மதுரையில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்ட எச்சரிக்கையை அவர்விடுத்தார்.

பாட்டாளி மக்கள் கட்சியை தடைசெய்வது குறித்து மத்திய அரசு தீவிரமாக (4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தேவை

றபர் சீல் செய்யத் தெரிந்தவர்களும், பழக ஆர்வமுள்ள G. C. E. O/L சித்தியடைந்த இருபாலாரும் நேரில் வரவும். செல்வம் ஆட்ஸ், கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (சி-7173)

### விற்பனையாகின்றன

மாற்றம்: 02 (தை-பங்குனி) சஞ்சிகை சிறுகதை, சிறுவர் கதை, அறிவியல் துணுக்குகள் கொண்டது ரூ 10/- புத்தகசாலைகளில் கிடைக்கும். (சி-7169)

### O/L கணிதம்

ஆண்டு 6-11 வரை கணிதத்தில் பின்னடைவான மாணவர்க்கு அடிப்படையிலிருந்து கணிதம் கற்பிக்கப்படும். திரு. கேதீஸ்வரன் Sp Trd Maths, (மணி பேக்கரி முன்பாக) பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (சி-7171)

### வியாபாரிகளுக்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவரிங் நகைகள், மணப்பெண் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-2829)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7180)

### குருபூசை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலில் ஈழத்துச் சித்தர்களில் ஒருவரான செல்லாச்சி அம்மையாரின் குருபூசை இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. (சு)

### இலவச சீருடை 3-ம் திகதி வழங்கப்படும்

(திருநெல்வேலி)

யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை அடுத்த மாதம் 3-ம் திகதி வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (157 இ)

### நெல்சாகுபடி பெரும் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஏற்பட்ட வரட்சியின் காரணமாக வட பகுதியில் நெற் சாகுபடி பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது.

முந்திய வருடங்களில் சாகுபடி செய்யப்பட்ட நெல்லின் ஐந்தில் ஒருபகுதி மட்டிலே இவ்வாண்டு சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக தென்மராட்சிப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

அத்துடன் ஏனைய பயிர்களும் வரட்சி காரணமாக வாடிக்கருகிக் காணப்படுகின்றன. (159)

## எழுதுவினைஞர் பரீட்சை: வெளி மாவட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைஎடுக்கமுடியாதநிலை

(நல்லூர்)

இன்று நடைபெறும் எழுதுவினைஞர் பரீட்சைக்கு வெளி மாவட்டப் பரீட்சார்த்திகள் பலர் தோற்ற முடியாத நிலையில் யாழ். மாவட்டத்தில் தங்கி நிற்கின்றனர்.

இவர்கள் தங்கள் மாவட்டங்களில் விண்ணப்பித்துவிட்டு யாழ். மாவட்டத்தில் கல்வியைத் தொடர்வதற்காகவும் வேறு சில தேவைகளுக்காகவும் தங்கி நின்றதனாலேயே இப்பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது.

இவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் விண்ணப்பித்த இடங்களில் இருப்பதாலும் பரீட்சை ஆணையாளரின் அறிவுறுத்தலின்படி அனுமதி அட்டை இன்றி எவரும் பரீட்சைக்கு தோற்றமுடியாது என கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளதும் இவர்களின் பரீட்சை எழுத முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். (158-இ

## இராசி பலன்

30-01-1993

சனிக்கிழமை

(தமிழ்த்திகதி தை 17)

ஸப்தமி ந. ப. 12-53, அசுவினி மாலை 60 வரை, சித்தயோகம் கரிநாள், இராகு காலம் காலை 9. 36 முதல் 11 06 வரை, சுபநேரம் மாலை 3 35 முதல் 5 06 வரை.

மேடம்:- ஐஸ்வரியலாபம், பெரியோர் ஆசி, விருந்துண்ணல்.

இடபம்:- விரோதிகளால் துன்பம், மனவெறுப்பு, அதிகசெலவு.

மிதுனம்:- குருபக்தி, காரியசித்தி, வஸ்திரலாபம்.

கடகம்:- பந்துக்களால் லாபம், புதிய உறவு தாராளகுணம்.

சிம்மம்: வியாகூலம், ஜீவன கஸ்டம், வெறுப்பு

கன்னி:- சுகக்குறைவு, ரோககுணம், குடும்பகஸ்டம்.

துலாம்:- இனசனமகிழ்ச்சி, உல்லாசவாழ்வு, தெய்வதரிசனம்

விருச்சிகம்:- காரிய சிறப்பு, வாக்குவன்மை, தொழில்லாபம்

தனுசு: பிறர் தொல்லை, அமைதியின்மை, மனசஞ்சலம்

மகரம்:- சுபவார்த்தை, தொழில்மேன்மை, புதிய திட்டம்.

கும்பம்:- சமாதானமுயற்சி, குடும்பசுகம், அதிகவருவாய்,

மீனம்:- அகாலபோஜனம், கருத்துமுரண்பாடு, தொழில் காரியம்,

ஜோஸ்யர்

## இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் கிளையின் தையல் பொருட் கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும்.

★

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை நடாத்தும் 1993க்கான இலவசக் கல்விக் பயிற்சி நெறிகளுக்கான ஆரம்பவிழா இன்று 30-ம் திகதி முற்பகல் 10-30 மணிக்குக் கிளைத் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக துணைவேந்தர் அ. துரைராஜா கலந்து கொள்வார். பல கல்விப்பயிற்சி நெறிகள் அன்று ஆரம்பமாக இருக்கின்றன. (கி)

★

(யாழ்ப்பாணம்)

கோப்பாயிலுள்ள சத்ய சாயி பஜனை நிலையத்தில் இன்று காலை 9 மணி முதல் பி. ப 5 வரை ஆன்மீகப் பொருட்காட்சி ஒன்று நடைபெறவுள்ளது. அகில இலங்கை மத்திய இணைப்பாளராக இருக்கும் திரு. எஸ். சிவஞானம் பிரசாந்திக் கொடியை ஏற்றி வைப்பார். வடபிராந்திய சத்ய சாயி இணைப்புக் குழுவின் தலைவர் திரு எஸ். விஜயரத்தினம், பேராசிரியர் திரு. சிவஞானசுந்தரம் ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள். (கி)

## இன்றைய கிரிக்கெட்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி, இன்று நடைபெறுகிறது. இப்போட்டி காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும். (159)


குறைந்த விலையில்

"திருவள்ளுவர் நாட்காட்டி"

அறிஞர் பெருமக்களின் பாராட்டுதலைப் பெற்ற திருவள்ளுவர் மணிக்கலண்டர் தற்போது விலை குறைக்கப்பட்டு விற்பனையாகின்றன.

★ தினம் ஒரு திருக்குறள்
★ வாக்கிய பஞ்சாங்க கணிப்பு
★ அன்றுடம் நிகழும் நினைவுக்குறிப்புகள்
★ மூவர்ண லித்தோ அச்சுவர்ண பதிப்பு

வர்த்தக விசாரணைகள்:

புஸ்பா அன் கம்பெனி

293, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

இத்துடன் "குளோரின்" கவுடரும் விற்பனைக்குண்டு.

(எ-2827)


## இலங்கைப் பெண்களுக்கு குவைத்தில் சித்திரவதை

(கொழும்பு)

குவைத்தில் கடமையாற்றும் இலங்கை உட்பட பல ஆசிய நாட்டுப் பெண்கள் பெரும் சித்திரவதைகளை அனுபவித்து வருவதனையடுத்து சிலர் தம் நாட்டு தூதரகங்களில் தஞ்சமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

வீட்டு எசமானர்களால் பெரிதும் துன்புறுத்தப்பட்டு வருவதாகவும் இவர்கள் அனுபவிக்கும் துயரங்கள் மிகவும் கொடுமையானதென்றும் தெரியவருகிறது. (க)

## முஸ்லிம் அகதிகளை வெளியேற்றக் கோரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவில் இருந்து பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் அகதிகள் வெளியேறவேண்டுமென்று பாரதீய ஜனதாக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்காக புதுடில்லியில் பங்களாதேஷ் மக்கள் வாழும் பகுதியை நோக்கி, பாரதீய ஜனதாக் கட்சித் தொண்டர்கள் அவர்களை அப்புறப்படுத்தும் நோக்கமாகப் பேரணி ஒன்றை நடத்தியதாகவும், பின்னர் இப்பேரணி தடுத்து நிறுத்தப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

இதேவேளை பங்களாதேஷ் நாடாளுமன்றம், இந்தியாவுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. (சு)

## உருளைக்கிழங்கு செய்கையை ஊக்குவிக்க ஏற்பாடு

(உடுவில்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உருளைக்கிழங்கு செய்கையை ஊக்குவிக்க யாழ்ப்பாண மாவட்ட விவசாய திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாக அவர்களுக்கு குறைந்த விலையில் மண்ணெண்ணெயை திணைக்களம் விநியோகித்து வருகின்றது.

இம்மாதத்துக்கு தேவையான நீர்பாய்ச்சலுக்கு வேண்டிய மண்ணெண்ணெய் உருளைக்கிழங்கு செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வாழைச் செய்கையாளர்கள், மரக்கறி செய்கையாளர்களை ஊக்குவித்து அவர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்க முயற்சிகள் மேற்கொள்வதாக யாழ்ப்பாண மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் திரு. கே. குணரட்ணம் தெரிவித்தார். (109)

## புகைப்படக்கலை பயிற்சி

(நல்லூர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஆதரவில் இடம்பெற்றுவரும் புகைப்படக்கலை பயிற்சி நெறியின் இரண்டாவது வாரஅமர்வு இன்று பிற்பகல் ஆரம்பமாகவுள்ளது:

இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் விரிவுரைகளில் திரு. ஆர். இயங்கேஸ்வரன், திரு. என். ராஜரட்ணம், திரு. பி. எம். நிக்கிலஸ் ஆகியோரும் நாளைய விரிவுரையில் இவர்களுடன் திரு சிகாரம் திரு எஸ். திருநாவுக்கரசு ஆகியோரும் விரிவுரையாற்றவுள்ளார்கள்.

இவ் விரிவுரைகளின்போது கமராக்கள் பற்றிய பூரண விளக்கம் கறுப்புவெள்ளை கலர் புகைப்படங்கள் கறுப்பு வெள்ளை கலர் படம் பிடித்தலும் பதித்தலும் ஆகியதுறைகளிலும் பயிற்சியாளர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது. (134)

## நிவாரணம்

(கொழும்புத்துறை)

யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் மீனவர்களுக்கும், மேசன், தச்சுத் தொழிலாளர்களுக்குமான நிவாரண உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன (154)

## இடமாற்றம்

(திருநெல்வேலி)

யாழ் மாவட்ட திவிசார ணர் குழுவின் நல்லூர் தலைமைக்காரியாலயம் பருத்தித்துறைவீதியிலிருந்து தற்காலிகமாக விநாயகர் வீதி நல்லூர் வடக்கில் உள்ள சிற்றிசன் கல்விநிறுவனத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது.

இக்காரியாலய செயற்பாடுகள் செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நடைபெறும் (157-இ)

## தகவல்சேகரிப்பு

(வட்டுக்கோட்டை)

யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் திட்டமிடல், முகாமைத்துவப் பிரிவு, யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் தகவல்களையும், தரவுகளையும் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

ஒவ்வொரு பாடசாலை அதிபர்களிடமிருந்தும் பாடசாலை தகவல்களையும், தரவுகளையும் பெறுவதற்காக 8 பக்கங்களைக் கொண்ட படிவங்களை கொத்தணி அதிபர்கள் மூலம் அனுப்பி வைத்துள்ளது.

இப்படிவங்கள் யாவும் நிரப்பப்பட்டு, பெப்ரவரி 15ம் திகதிக்கு முன்னர் கோட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களினால் கோரப்பட்டுள்ளது. (139)


பதவி வெற்றிடம்

திருநெல்வேலி டயா எலெக்ரோனிக் கொம்பிளக்ஸ் நிறுவனத்தில் பெண் காசாளர், விற்பனையாளர் பதவிகளுக்கு புதியவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். கல்வித்தராதரம் தரம் ஒன்பதுவரை எதிர்பார்க்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் சொந்த கையெழுத்தில் தயாரித்து 02-02-93க்கு முன் நேரில் சமுகம் தரவும்.

டயா எலெக்ரோனிக்ஸ் கொம்பிளக்ஸ்

பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி.

(இ-7182

# ஐம்பது கோடி மக்கள் தற்போது

# உலகெங்கிலும் தமிழ் பேசுகிறார்கள்

## —பேராசிரியர் சண்முகதாஸ்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் தற்போது 50 கோடி மக்கள் தமிழ்மொழியைப் பேசி வருவதாக பேராசிரியர் அ. சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற 'திராவிடமொழி ஜப்பானிய மொழி ஒப்பீடு' பற்றி பேசிய அவர் மேலும் கூறுகையில்:

உலகெங்கும் 150 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் திராவிடமொழிகளைப் பேசி வருகின்றனர். 1971ல் உலகின் குடிசன மதிப்பீட்டுபடி 37.7 கோடி மக்கள் தமிழ்மொழியைப் பேசி வந்தனர். தற்போது இந்தத் தொகை 50 கோடியாக அதிகரித்துள்ளது.

திராவிட மொழிகளுள் சமஸ்கிருதக் கலப்புக்குறைவாக உள்ளது தமிழ்மொழியே என அறிஞர் கால்டுவெல் கூறியுள்ளார். 'இருக்கு'வேதத்திலேயே திராவிடச்சொற்கள் காணப்படுகின்றன. பெருமைதரு பண்பாட்டு நாகரிகம் கி.மு. 3500 ஆண்டு பழமை வாய்ந்தது என செக்கோஸ்லேவாக்கிய அறிஞரான சுவெலபில் கூறியுள்ளார். இப்பண்பாட்டின் வழித்தோன்றல்களே தமிழர். தமிழரின் நாகரிகம் மலைசார் மக்களின் நாகரிகம்.

திராவிடமொழி ஹரப்பா மொழிப்பண்பாட்டுடன் ஒத்து விளங்குகிறது. கி.மு. 600ல் அசிரியரால் தோற்கடிக்கப்பட்ட ஈலம் அரசு இருந்த பிரதேசத்து மொழி திராவிட மொழியுடன் தொடர்புடையது.

கி.மு. 300 தொடக்கம் கி.பி. 500 வரையான காலப்பகுதியில் தோன்றிய செய்யுள் இலக்கியங்கள் பல ஜப்பானிய மொழி இலக்கியங்களுடன் ஒத்துக்காணப்படுகின்றன.

ஜப்பானிய மொழியில் பல தமிழ் சொற்கள் கலந்துள்ளன. இவற்றுக்கு பல உதாரணங்களைக் காட்டலாம். மேலும் ஜப்பானிய இலக்கியச் செய்யுள்கள் 5 முதல் 7 அடி உடையவை.

கலித்தொகை, ஆசாரக்கோவை போன்ற செய்யுள் நூல்களிலும் 5-7 அடியுடைய செய்யுள்கள் பல காணப்படுகின்றன. பல உலக நூல்களுக்கும் ஜப்பானிய செய்யுள் இலக்கியங்களுக்குமிடையே பலவேறு ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

ஆனைக்கோட்டை, ஆதிச்சநல்லூர், சானூர், கொடுமணல் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருளாய்வின்போது கிடைத்த மட்பாண்டங்களில் காணப்படும் எழுத்துக்களும் ஜப்பானில் இரு நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருளியல் ஆய்வுகளின் போது கிடைத்த மட்பாண்டங்களில் காணப்படும் எழுத்துக்களும் ஒரே மாதிரியானவையாகக் காணப்படுகின்றன. இவற்றில் காணப்படும் 300 குறியீடுகளில் 270 குறியீடுகள் ஒத்திருப்பதாக சான்றுகாட்டி விளக்கமளித்தார். (159-சி)

---

# குளோரின் தடையால் தொற்றுநோய் பரவுகிறது

(கொழும்புத்துறை)

வடபகுதிக்குக் குளோரின், மலத்தியோன் ஆகியவற்றைக் கொண்டு வருவதற்கு இராணுவம் தடை விதித்துள்ளதாலேயே, தொற்று நோய்கள் வேகமாகப் பரவுவதற்கு ஒரு முக்கிய காரணமாகும். இவ்வாறு அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பில் இருந்து நாம் குளோரினை இங்கு கொண்டு வருவதற்கு எவ்வளவோ முயன்றும், இராணுவமும், கூட்டுப்படைத் தலைமையகமும் மறுப்புத் தெரிவித்து விட்டன.

மாரிகாலத்தின்போது தண்ணீர் பெருமளவில் அசுத்தம் அடைந்து காணப்படுகிறது. அத்தகைய தண்ணீரை மக்கள் பருகுவதால் நெருப்புக் காய்ச்சல், வயிற்றுவலி, வயிற்றோட்டம், செங்கமாரி, மலேரியா போன்ற தொற்றுநோய்கள் இங்கு வேகமாகப் பரவுகின்றன. (154-சி)

---

# ● கடலில் தேடுதல் தொடர்கிறது

# 67 சடலங்கள் மீட்கப்படவில்லை

# உறவினர்கள் பெரும் சோகம்

(திருமலை)

திருமலை-மூதூர் படகு விபத்தில் சிக்கி உயிரிழந்ததாகக் கருதப்படும் 67 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களின் உறவினர்கள், நேற்றும் ஐந்தாவது நாளாகத் திருமலைக் கடற்கரையில் அழுதவண்ணம் காத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்களின் சடலங்களைத் தேடி, நேற்று ஐந்தாவது நாளாகக் கடற்படைச் சுழியோடிகள் தேடுதல் நடத்தினர். நேற்று முன்தினம் நடைபெற்ற தேடுதலில் ஒரு சடலம் மீட்கப்பட்டது.

தேடுதல் முயற்சி இன்றுடன் கைவிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்தில் சிக்கியவர்களில் 88 பேர் உயிரிழந்துள்ளதாகத் தற்போது தெரிவிக்கப்படுகிறது. இதுவரை 21 சடலங்கள் மீட்கப்பட்டு, அடையாளம் காணப்பட்டுள்ளன. (சி)

---

## கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவைச் சேர்ந்த குசைப்பிள்ளை தேவராசாவின் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

☆

சரவணையைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி நந்தினி என்பவருடைய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

---

# இலவச பாட நூல் விநியோகிப்பதில் சிரமம்

(திருநெல்வேலி)

மாணவர்களுக்கான இலவச பாட நூல் விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாணவர் தேவைக்கேற்பப் பாட நூல்கள் போதாமையால் குறிப்பிட்ட மாணவர்களுக்கே இவை விநியோகிக்கப்படுகின்றன.

ஆண்டு 9, 10, 11ல் கல்வி பயிலும் மாணவர்களுக்கே இந்நூல்கள் போதியளவு கிடைக்க முடியாதுள்ளது. சென்ற வருடம் இவ்வகுப்புக்களில் கல்வி கற்றவர்களிடம் இப்பாடநூல்கள் திரும்பப் பெறப்படவில்லை. இதனால் பாடசாலைகளில் கொத்தணியால் வழங்கப்பட்ட பாட நூல்கள் பிரித்து வழங்கப்படுகிறது. [157-சி]

---

## 'பிரேமாவின்' கையெழுத்திட்டு

# இளம்பெண் மோசடி

(கொழும்பு)

ஜனாதிபதியின் கையெழுத்து போன்று போலியாக அவரது கையெழுத்தை இட்டு நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு தோற்றிய இளம்பெண் ஒருவர் வசமாக சிக்கிக்கொண்டார்.

சுயாதீன தொலைக்காட்சி சேவைநிலையத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்காக ஜனாதிபதியின் கையொப்பத்தை போலியாக இட்டு தயாரிக்கப்பட்ட சிபார்சு கடிதம் ஒன்றை சமர்ப்பித்த குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு நீதிமன்றில் இளம்பெண் ஒருவர் ஆஜராக்கப்பட்டார்.

இவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். (இ)

---

# அரசியல் விடுதலையுடன் ஆன்மீக விடுதலைக்கு வழிகாட்டியவர் காந்திமகான்

அறப் போரின் ஆற்றலை, அகில உலகுக்கும் அறியக் கொடுத்தவர் காந்தி அடிகள். சத்தியமும், அன்பும் சாகும் வரை மேன்மை தரும் என்ற தற்போதனையை வாக்காகக் கொண்டவர். அன்பும், அகிம்சையும் அனைவருக்கும் அவசியம் என்பதை அனுபவத்தில் காட்டியவர். பாரத நாட்டின் விடுதலைப் புருஷர்.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை, காந்தி மறைந்த செய்தி கேட்டு உடல், பொருள், ஆவி மூன்றையும் பண்புடை பாரதத் தாயின் திருப்பாதங்களிலே தாரை வார்த்துக் கொடுத்த தன்னலமற்ற தனிப் பெரும் தலைவர் காந்தி மகான் என்றார். அவரின் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்திருந்த சிறப்புமிகு கொள்கைகள் இன்று காந்தியமாக மிளிர்கின்றன. காந்தியத் தத்துவங்கள் புதுமையானவை. இதிகாசங்கள், புராணங்களில் காணக் கிடைக்காதவை.

இராமாயணத்தில் "நீடிய அரக்கர் சேனை நீறுபட்டொழிய வாகை சூடிய" என்று இராமனின் பெருமை கூறப்பட்டுள்ளது. நம் கண்ணன் பிறந்ததும் துஷ்டநிக்ரக பரிபாலனம் செய்வதற்காகவே. முருகப்பெருமானின் திருஅவதாரமும் இப்புவியில் நிகழ்ந்துள்ளது. காந்தியத்தின் கொள்கை அப்படியானதல்ல. இன்னா செய்தாரைக்கும் இனியவை செய்யத் தூண்டுவது. அதனால்தான் காந்தியம் உலகுக்குப் புதுமையானது.

தன்னுயிர்போல் தனக்கு அழிவு வரினும் பிறவுயிர் தன்னையும் காத்தல். மன்னுயிரெல்லாம் கடவுளின் வடிவம் என்ற கொள்கையை வலியுறுத்தி நிற்கின்றது.

> இன்று
> நினைவுதினம்

தன் பல சோதனைகளைச் செய்து பார்த்து, அவற்றைச் செயலிலும் சாதனை செய்யும்படி வற்புறுத்தினார். இப்படியாகச் சோதனை, சாதனை, போதனை என்ற முடிவுகளில் தன்னை உருவாக்கிக் கொண்டார்.

பழிக்குப் பழி வாங்கும் செயல், சமுதாயத்திலிருந்து ஓடவேண்டும் என்றார். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைத் திருப்பிக்கொடு என்ற யேசுபிரானின் வாக்குக்கு இணங்க, இம்சை செய்பவரையும் மன்னிக்கும் இதயமே வெற்றிக்கு வழி கோலும் எனப் பகன்றார். இதற்காக அடிபட்டும் சிறைபட்டும் வாழ்ந்தார். அடித்தவர்களை 'அன்பே' என்றார். உதைத்துமிதித்தவர்களை உத்தமனே என்று போற்றினார்.

காந்திகாட்டிய காந்தியம் ஒரு சாத்வீகப் போராட்டம். அங்கு குருதியாறு ஓடவில்லை. மாறாக தர்மப்பொருள் பெருக்கெடுத்தன ஓடியது. அன்பு அகிம்சை, சத்தியம் என்னும் ஆயுதங்களை, ஆதாரமாகக் கொண்டு அன்னியரின் பேராயுதங்கள் அனைத்தும் மழுங்கடிக்கப்பட்டன. பலாத்காரத்தினால் அன்னிய ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து வெற்றியை எதிர்பார்க்கமுடியாது. பொறியடக்கமே உயர்நிலைப்படுத்தும். ஆசைகளை அடக்குதலே வெற்றிப் பாதையின் திறவுகோலாகும். இதற்காகவே சத்தியாக்கிரகம் என்ற உண்மைக் கொள்கையை முன்வைத்தவர். அன்பே சத்தியம் சத்தியமே அன்பு. காந்தியம் கடைப்பிடிக்கப்படும் போது காந்தியை நாம் தரிசிக்கின்றோம். கருணை, அன்பு, சகோதரத்துவம் இம்மூன்றும் ஒருங்கே சேர்ந்தது காந்தியம்.

அவருடைய ரகுபதிராகவ ராஜாராம் என்ற பாடல் சர்வமதத்தின் சமரசத்தைக் காண்கின்றோம். அன்னார் அரசியல் விடுதலையையும் சமுதாய விடுதலையையும் வாங்கிக்கொடுத்த பெருந்தகை.

ஐயா. சச்சிதானந்தம்

---

# செஞ்சிலுவை அதிகாரி யாழ்ப்பாணம் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சம்மேளன செஞ்சிலுவைச் சங்கத்தினதும், செம்பிறை சங்கங்களினதும் பிரதம செயலாளர் திரு. ஸ்ரீபன் டாலி உத்தியோக பூர்வமான விஜயமொன்றை மேற்கொண்டு இந்தவார இறுதியில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இங்குள்ள இடம்பெயர்ந்தோருக்காக இயங்கும் முகாம்களைப் பார்வையிட்டு அங்குள்ளோரின் குறைகளைக் கேட்டறியவுள்ளார். மேலும் அவர் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் அலுவலக ஊழியர்கள், ஊக்கமளிக்கும் துணை நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடவுள்ளார்.

1980ம் ஆண்டின் பின் இலங்கைக்குக் குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ள முதல் செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரி இவராவார். (இ)

---

## மகளிர் பொற்கணக்கு

# இன்று இறுதிநாள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி மேற்தரக் கிளையில் மகளிர் பொற்கணக்கு பரிசுக்குலுக்கலில் (ஆகஸ்ட்-1993) பங்குபற்றுவதற்கு ரூபா ஐநூறுடன் மகளிர் பொற்கணக்கைத் திறப்பதற்கான முடிவுத்திகதி இன்று சனிக்கிழமை ஆகும்.

இதற்காக இன்று சனிக்கிழமை அலுவலக நேரத்தில் ஒரு விசேட கருமபீடம் இயங்கும் என்பதையும் பிரதான முகாமையாளர் திருமதி கமலராணி துரைராசா தெரிவிக்கின்றார். (157-சி)

---

# பரீட்சை முடிவுகள்

(திருநெல்வேலி)

ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை முடிவுகள் பற்றி ஆணையாளரினால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது.

இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு வெற்றிடங்கள் வரும்போது நியமனம் வழங்கப்படும் எனவும் உடனடியாக நியமனம் வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (157)

# இராசதுரை மீண்டும் அரசியலில் ஈடுபட முடிவு

(கொழும்பு)

மலேஷியாவில் இலங்கையின் உயர் ஸ்தானிகராக தற்போது கடமையாற்றும் மட்டக்களப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான செல்லையா இராசதுரை விரைவில் நாடு திரும்பவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் இலங்கைக்கு மீண்டும் வந்ததும் அரசியல் பிரச்சார நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபடுவதுடன் சமயப் பணிகளை மேற்கொள்ள இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (வி)

# இளம் பொலிஸ் அதிகாரிகள் அதிருப்தியுடன் சேவை

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் பிரிவில் மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்கும் இளைய தலைமுறைப் பொலிஸ் அதிகாரிகளுக்குமிடையில் பெரும் அதிருப்தி தற்போது ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தற்போது நடைபெற்று வரும் யுத்தத்தில் இளம் வயதிலுள்ள பொலிஸாரே பெரும்பாலும் கொல்லப்பட்டு வருகின்றனர். இதேவேளையில் மூத்த பொலிஸ் அதிகாரிகளின் சேவைக்காலம் நீடிக்கப்படுவதுடன் அவர்களுக்கு புதிய புதிய பதவி உயர்வுகளை பாதுகாப்பு அமைச்சு வழங்கி வருகிறது. இது இளம் வயது பொலிஸ் அதிகாரிகளுக்கு பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் பல பொலிஸ் அதிகாரிகள் பொலிஸ் பிரிவிலிருந்து விலகுவதற்கு முயற்சிகள் செய்து வருவதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## விவசாயிகளுக்கு 100 பரல் ம. எண்ணெய்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ் அரசாங்க அதிபரினால் எடுத்து வரப்பட்ட 245 பரல் மண்ணெண்ணெயில் 100 பரல் மண்ணெண்ணெய் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

விவசாயிகளுக்கான மண்ணெண்ணெய் அகில உலக கெயார் நிறுவனத்தால் விநியோகிக்கப்படும். (இ-159)

## ஆஸ்திரியாவில் மரணமான இலங்கையர் பற்றி மேலதிக விபரம் சேகரிப்பு

(பொன்)

ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் வீதி ஓரத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்ட ஆறு இலங்கையர் தொடர்பாக மேலதிக விபரங்களை அறிய இலங்கை வெளியுறவு அமைச்சு ஜெர்மன் தலைநகர் பொன்னிலுள்ள இலங்கை தூதரகத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

மேற்படி ஆறுபேரும் எவ்வாறு இறந்தார்கள் என்பது பற்றியும் விளக்கம் கோரப்பட்டுள்ளதாம்.

சட்டவிரோத கடத்தலில் ஈடுபட்ட இவர்கள் வியன்னாவுக்குள் நுழையும்போது மூடப்பட்ட கொள்கலன் ஒன்றினுள் வந்தபோது மூச்சு திணறி இறந்ததாக ஆஸ்திரிய பொலிஸார் கூறியுள்ளனர். (இ-சி)

## இந்தியத் தூதுவர் பிரியாவிடை பெற்றார்

(கொழும்பு)

இந்திய தூதர் திரு. எல். என். ஜா கடந்த புதன்கிழமை ஜனாதிபதி பிரேமதாஸாவை சந்தித்து பிரியாவிடை பெற்றார்.

இலங்கையில் தனது கடமையை முடித்துச் செல்லும் திரு. ஜா மரியாதைக்குரிய சந்திப்பாக இந்தப் பிரியாவிடையை பெற்றார். (சி)

## பயிலுநர் ஆசிரியர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பத்து பிரதேச தொலைக் கல்வி நிலையங்களிலும் 1991, 93 ஆண்டு காலப் பகுதியில் பயிலுநர் ஆசிரியர்களாக பயிலுவோர் எதிர்வரும் 1-ந் திகதி திங்கட்கிழமை அந்தந்த தொலைக்கல்வி நிலையங்களில் தவறாது சமூகம் அளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராசா தொலைக்கல்வித்துறை இணைப்பாளர் என்ற வகையில் எதிர்வரும் மார்ச் 20-ம், 21-ம் திகதிகளில் நடைபெற இருக்கும் பரீட்சை தொடர்பாக இன்று கலந்துரையாடுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ம. எண்ணெய் லீற்றர் 15 ரூபா

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவு சங்க நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல கூட்டுறவு சங்கக்கிளைகளிலும் மண்ணெண்ணெய் லீற்றர் 15 ரூபாவுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

குடும்பம் ஒன்றிற்கு ஒரு லீற்றர் வீதம் இந்த மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. (க)

## எயர்லங்கா விமானத்தில் தமிழ் ஒலிக்க ஏற்பாடு

(கொழும்பு)

எயர் லங்கா விமானத்தில் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக இனிமேல் தமிழ் மொழிகளில் அறிவித்தல்களும் தமிழ் சினிமாப் பாடல்களைக் கேட்கக்கூடிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக எயர் லங்கா விமானத்தின் பணிப்பாளர் சின்னத்துரை தனபாலா தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் எயர் லங்கா விமானங்களில் ஆங்கிலத்திலும், சிங்கள மொழியிலும் மாத்திரமே ஒலிபரப்புகள் செய்யப்பட்டு வந்துள்ளன.

இனிமேல் பயணிகள் தமிழ் மொழிகளிலும் அறிவித்தல்களையும் பாடல்களையும் கேட்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

பயணிகளின் நலன்களைக் கவனிப்பதற்காக எயர் லங்கா பணிப்பாளர் திரு. சின்னத்துரை தனபாலாவின் தலைமையில் வெவ்வேறு மொழிகள் பேசும் 14 பேர் அடங்கிய குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (வி)

## பல்கலைக்கழக மாணவர்க்கு மண்ணெண்ணெ

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அதன் ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் தலா இரண்டு லீற்றர் மண்ணெண்ணையை விநியோகம் செய்யவுள்ளது.

லீற்றர் பத்து ரூபாய்ப்படி இந்த மண்ணெண்ணை வழங்கப்படும். (இ-159)

**புலிகளுடனான**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

அங்கிலிக்கன் ஆயரிடம் விடுதலைப்புலிகள் தம்வசம் வைத்திருந்த பொலிசார்களில் இருவரை எதுவித நிபந்தனையுமின்றி ஒப்படைத்ததையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

விடுதலைப் புலிகளிடம் இருக்கும் மற்றைய பொலிசாரையும் விடுதலை செய்வதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை தற்போது நாடியுள்ளோம்.

ஆயர் கென்னத் பெர்னாண்டோ யாழ் நகரில் விடுதலைப்புலிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் விபரங்களை இவ்வார இறுதிக்குள் ஜனாதிபதியிடம் ஆயர் கையளிக்க இருப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறினார் (வி)

**புலிகளின்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக அந்தப் பத்திரிகை அதன் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (வி)

**ரேகணுவின்**

(1-ம பக்கத் தொடர்ச்சி)

வும் இவர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவர் தற்பொழுது பேராசிரியர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதையும் இவரின் செயற்பாடுகள் மிகவும் அபாயகரமானவையென வும் சக விரிவுரையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ-க)

**மூதூர்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பணி நிமித்தலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து தாம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாகவும் மேலும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (இ-க)

**அவசரகால**

(1-ம் பக்க தொடர்ச்சி)

தாக்க முற்படுவது போல் வெறும் பிரசாரம் செய்யப்படுகின்றது என்றும் ஆனால் ஜே. வி. பி தலைதூக்குகின்றது என்பதற்கு போதுமான சான்றுகள் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-க)

**கைதான**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து இவர் தீவிர விசாரணையின் பின் கடந்த வியாழக்கிழமை நாடு கடத்தப்பட்டார். (சி)

**கட்சிதடைசெய்யப்பட்டால்**

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆராய்ந்து வருவதும் இம்முயற்சியில் தமிழக அரசின் பூரண ஒத்துழைப்பை அது நாடி நிற்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-க)

**தடைசெய்யப்பட்ட**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் பேச்சுக்கள் நடத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

தற்போது சுமார் 50 பொருட்கள் வடபகுதிக்கு எடுத்து செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. (சி)

**பூநகரி பாதை**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

இப்பாதையை போக்குவரத்திற்கு அனுமதிப்பதற்கான ஒழுங்குகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக யு. என். எச். சி. ஆர். தெரிவித்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் குறித்து விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் ஏற்ற ஒழுங்குகளை செய்வதிலும் யூ. என். எச். ஸி. ஆர். ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-கி)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளைத் தலைமையலுவலகம்

ஊர்காவற்றுறைப் பிரிவின்

## விசேட பொதுக் கூட்டம்

மேற்படி விசேட பொதுக்கூட்டம் சனிக்கிழமை (06-02-93) பிற்பகல் 2-00 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் கிளையினரால் நடாத்தப்படவிருக்கிறது. 09-11-92-ந் திகதி வரை அங்கத்துவப் பணம் செலுத்திய அங்கத்தவர்கள் மாத்திரம் மேற்படி கூட்டத்தில் பங்குபற்றலாம். அங்கத்தவர்களின் தற்போதைய முகவரி இல்லாமையால் தனித்தனிக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. எனினும் கூட்ட நிகழ்ச்சியைத் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
29-01-1993.

(ஏ-2833)

# மரண அறிவித்தல்

## சுவாம்பிள்ளை மரியம்மா

நாவாந்துறை செபஸ்திசுவாம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவி மரியம்மா (கண்ணம்மா) 29-01-1993 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார் ராசவதி, புனிதம், யேசுதாசன் (சற்குணம் - பிரான்ஸ்), காலஞ்சென்ற பேவிற் சவேரியாம்பிள்ளை ஜெயப்பிரகாஸ் (பிரான்ஸ்), கொஞ்சேஞ்சியம்மா (திலகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் தங்கராசா, காலஞ்சென்ற செல்வராசா, றீற்று பிரான்ஸ் பற்றீசியா, மரிசலீன் மரியதாஸ் ஆகியோரின் மாமியாருமாவார் அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று சனிக்கிழமை (30-01-1933) பிற்பகல் 4 மணிக்கு நாவாந்துறை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காகஎடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

76, கடற்கரை வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

(சி 7184)

## திருமதி எஸ். குணம்

(சங்கானை)

திருமதி எஸ். குணம் 24-01-93 திருமலையில் காலமானார். அன்னார் சங்கானையை பிறப்பிடமாகக் கொண்டவரும் மனோன்மணி அரசினர் வைத்தியசாலை (திருமலை) செல்வராஜா, ஜெயராஜா (சங்கானை), சிறிலீஸ்மணி (திருமலை), லோகேஸ்மணி (இந்தியா), செல்வரஞ்சிதமணி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பேவின்பநாயகம் (திருமலை துறைமுக அதிகார சபை), ராஜேஸ்வரி, திலகவதி (சங்கானை), சோதீஸ்வரன் (இந்தியா), ரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெகன் அமரநாத் (லண்டன்), சுகந்தினி, மகிளினி (திருமலை), திருமாறன், சுகிபரன், தசிபரன், சுதேநாத்பரன், ஜெயகாந்தன், தர்ஜன், நிரோஜன் (சங்கானை), ஜெயச்சந்திரன், பிரேமினி, லதீபா (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் (24-01-93) ஞாயிற்றுக்கிழமை திருமலையில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. செல்வராஜா
(மகன்)

"லக்ஷ்மி பவனம்"
தேவாலய வீதி,
சங்கானை.

(சி 7183)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் இலவ்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Nnmber B/10336/B